IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE NO.I, HOSUR

OS NO.111/2014

**DW3 :** வெங்கடேஷா S/o. சின்ன எல்லப்பா, (Age –58)

(VAO – Nagondapalli Village)

**Date :** 21.01.2026

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை : –**

வழக்கு சொத்து சர்வே எண் 669 நத்தம் வகைப்பாடு சொத்து என்றால் சரிதான். வழக்கு சொத்தின் பழைய சர்வே எண் 54. மேற்படி பழைய சர்வே 54 ன் மொத்த விஸ்தீரணம் 2.12.5 ஹெக்டர்ஷ் மேற்சொன்ன சொத்து நாகொண்டப்பள்ளி கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். அதன் பிறகு 1994ம் ஆண்டுதான் நத்தம் சர்வே எண் வழங்கப்பட்டது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி கெம்பண்ணாவின் தந்தை பெயர் எனக்கு தெரியாது. எனக்கு வழங்கப்பட்ட சாட்சி சம்மனில் சர்வே எண் 669/30ல் உள்ள சொத்தை பொறுத்து சாட்சியம் அளிக்க கோரப்பட்டது. சர்வே எண் 669/30 க்கு அருகில் தெரு உள்ளது என்றால் நான் ஸ்தலத்தை பார்வையிடவில்லை அதனால் எனக்கு தெரியவில்லை. 1ம் பிரதிவாதியின் தந்தையுடன் பிறந்தவர்கள் 4 நபர்கள் என்றால் எனக்கு தெரியாது.

1ம் பிரதிவாதியின் தந்தையுடன் பிறந்த சகோதரருக்குள் ஏற்பட்ட பாகபிரிவினையில் சர்வே எண் 669/32 யில் உள்ள சொத்து ராமய்யாவுக்கும்,

அதற்கு மேற்கில் இலட்சுமய்யாவுக்கும், அதற்கு மேற்கில் திம்மராயப்பாவுக்கும், அதற்கும் மேற்கில் குள்ளப்பாவிற்கும் பாகம் பிரித்து கொண்டார்கள் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. ஸ்தலத்தில் 1ம் பிரதிவாதியின் குடும்ப சொத்து 4 பிரிவுகளாக உள்ளது எனறால் எனக்கு தெரியாது. மேற்சொன்ன லட்சுமய்யா பாக சொத்தை 1ம் பிரதிவாதி கெம்பண்ணா கிரயம் வாங்கி அந்த சொத்தின் சுவாதீனத்தில் உள்ளார் என்றால் தெரியாது. அதே போல் ராமய்யா சொத்தை காந்தம்மா கிரயம் பெற்று அனுபவித்து வருகிறார் என்றால் தெரியாது. அதேபோல் திம்மராயப்பா தனது சொத்தை தனது பேரன் சீனப்பாவிற்கு கொடுத்து அவர் சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்றால் எனக்கு தெரியாது.

குள்ளப்பா பாக சொத்து அவர்களுடைய வாரிசுகளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கு வடக்கு மற்றும் தெற்கு பக்கத்தில் ரோடு உள்ளது. வழக்கு சொத்திற்கு வடக்கு பக்கம் உள்ள ரோட்டிற்கும் வடக்கு பக்கம் யாருடைய நிலம் உள்ளது என்று எனக்கு தெரியாது. சர்வே எண் 669/32 காந்தம்மா பெயரில் பட்டா உள்ளது என்றால் சரிதான். சர்வே எண் 669/31ல் உள்ள சொத்து திம்மராயப்பன் மகன் மரியப்பா பெயரில் பட்டா உள்ளது என்றால் சரிதான். சர்வே எண் 669/30 குள்ளப்பா பெயரில் பட்டா உள்ளது என்றால் சரிதான். குள்ளப்பாவின் மகன்தான் 1ம் வாதி ராமச்சந்திரன் என்றால் எனக்கு தெரியாது. குள்ளப்பாவின் மகன் ஒசூரில் இருப்பதாக கேள்விபட்டேன். சர்வே எண் 669/30ல் தற்போது 1ம் பிரதிவாதி கெம்பண்ணா தான் குடியிருந்து வருகிறார். எங்களுடைய வருவாய் ஆவணங்களில் சர்வே எண் 669/30 யை பொறுத்து கெம்பண்ணா பெயரில்

கிரய பத்திரம் பதிவாகி உள்ளதாக குறிப்பு உள்ளதா என்றால் இல்லை. தற்போது சர்வே எண் 669/30க்கு திம்மராயப்பா மகன் கெம்பண்ணா பெயரில் இணையவழி பட்டா பதிவாகி உள்ளது. 1992ம் ஆண்டுக்கு பிறகு தான் நத்தம் நிலவரி மேம்பாட்டு திட்டம் நடைமுறைக்கு வந்ததது என்றால் சரிதான். நத்தம் நிலவரி திட்டத்தின் போது சொத்தில் யார் யார் அனுபவம் மற்றும் உரிமம் உள்ளதோ அவர்கள் பெயரில் பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி பெயரில் பத்திரம் பதிவாகி இருந்தால் மட்டுமே அவர் பெயருக்கு பட்டா மாற்றம் செய்ய வேண்டும் என்றால் சரிதான்.

உரிமையாளரின் வாரிசு சான்றின் அடிப்படையிலும் பட்டா மாற்றம் செய்யப்படும். எங்களுடைய வருவாய் ஆவணங்களின் படி 1ம் பிரதிவாதி கெம்பண்ணா குள்ளப்பாவின் மகன் இல்லை என்றாலும், 1ம் பிரதிவாதி திம்மராயப்பாவின் மகன் என்றாலும் சரிதான். 1ம் பிரதிவாதி மேற்சொன்ன குள்ளப்பாவின் மகன் இல்லை என்பதால் சர்வே எண் 669/30க்கு 1ம் பிரதிவாதி பெயரில் பட்டா மாற்றம் செய்யதது தவறு என்றால் 2008ம் ஆண்டு பட்டா மாற்றம் செய்யப்பட்டது அதனால் அதைப்பற்றி எனக்கு தெரியவில்லை. 1ம் பிரதிவாதி பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டதற்கான செயல்முறை ஆணை விவரங்கள் எதுவும் என்னுடைய வருவாய் ஆவணங்களில் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். பட்டா மாற்றம் உத்தரவு பிறப்பிக்கப்பட்டால் அந்த உத்தரவு நகலை நத்தம் சிட்டா பதிவேட்டில் இணைக்கப்பட வேண்டும் என்றாலும் ஆனால் என்னிடம் உள்ள நத்தம் சிட்டா பதிவேட்டில் அவ்வாறு எதுவும் இல்லை என்றால்

சரிதான்.  அடங்கல் பதிவேட்டின் படி சர்வே எண் 669/30 க்கு இன்று வரை குள்ளப்பா பெயரில் தான் பதிவு உள்ளது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**

**சாட்சி கூறியதனை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு சரியென ஒப்புக்கொண்டார்.**

**(ஓம். /−ஆர். நரசிம்மமூர்த்தி,)**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 ஓசூர்.**